நகராட்சி அலுவலகம்,
புளியங்குடி,
நாள்.27.08.2020.

<u>சாதாரண கூட்டம்</u>

புளியங்குடி நகராட்சி மன்றத்தின் சாதாரண கூட்டம் 2020-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 31.08.2020-ம் தேதி திங்கள்கிழமை மாலை 4.00 மணிக்கு தனிஅதிகாரி அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

தனிஅலுவலர் (ம) ஆணையாளர்,
புளியங்குடி நகராட்சி

| Date of Council | Decision No. | Subject in Agenda | Decision of Council |
|---|---|---|---|
| | 1464 | பொருள்.1<br>புளியங்குடி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரையின்படியும் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்கு பேட்டரி வாகனத்தில் இயந்திர தெளிப்பான் வைத்து சோடியம் ஹைப்போ குளோரைடு மற்றும் லைசால் மருந்து கலந்த கலவை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெளிக்கப்பட்டு வருகிறது. மேற்படி இயந்திர தெளிப்பானுக்கு கொரோனா பணி முடியும் வரை தேவையான எரிபொருள்களான பெட்ரோல், டீசல் மற்றும் ஆயில் ஆகியவற்றிற்கு ஏற்படும் செலவுத் தொகை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண்.884/2020/எச்1) | அனுமதிக்கப் பட்டது |
| | 1465 | பொருள்.2<br>புளியங்குடி நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக PPE Kit 1000 எண்ணம், கையுறை 1000 எண்ணம் வாங்குவதற்கு தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து 30.07.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | அனுமதிக்கப் பட்டது |

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளியின் விலை விபரம் (GST உட்படட) |
|---|---|---|
| 1 | ஆரஞ்ச் ஹெல்த் சென்டர், 29, தெற்கு ரதவீதி, நாகர்கோவில் - 629 001. | PPE Kit - 1 எண்ணம் ரூ.155/- கையுறை - 1 எண்ணம் ரூ.65/- |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>ஏ.ஆர்.பர்மா, 113/9பி, ராஜா காம்ப்ளக்ஸ், திருநெல்வேலி - 627 001.</td><td>PPE Kit - 1 எண்ணம் ரூ.155/- கையுறை - 1 எண்ணம் ரூ.65/-</td></tr>
<tr><td>3</td><td>வி.எல்.சர்ஜிகல்ஸ், 1/22, தெற்கு ரதவீதி, நாகர்கோவில் - 629 001.</td><td>PPE Kit - 1 எண்ணம் ரூ.155/- கையுறை - 1 எண்ணம் ரூ.65/-</td></tr>
</table>
மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் உள்ள ஆரஞ்ச் ஹெல்த் சென்டர், 29, தெற்கு ரதவீதி, நாகர்கோவில் - 629 001 நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. மேற்கண்ட குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஆரஞ்ச் ஹெல்த் சென்டர், 29, தெற்கு ரதவீதி, நாகர்கோவில் - 629 001 நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.884/2020/எச்1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>1466</td>
<td>பொருள்.3<br>இந்நகராட்சி வார்டு எண்.13, வெள்ளூரணி தெருவில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம் இந்நகர்மன்ற தீர்மான எண்.585, நாள்.28.03.2018-ன்படி திரு.கே.முத்துக்குமார் என்பவருக்கு 2018-19 முதல் 2020-21 வரை அனுபவித்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது. நகராட்சி பொறியாளர் தமது 25.05.2020-ம் தேதிய அறிக்கையில் மேற்கண்ட கட்டண கழிப்பிடத்தில் நச்சுத்தொட்டி கழிவு வெள்ளூரணி குளத்தில் கலந்து சுகாதாரக்கேடு விளைவிக்கும் வகையில் இருந்ததாலும் மேற்படி கழிப்பறை பயன்பாடு இல்லாமல் பூட்டப்பட்டு இருந்த காரணத்தாலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி பொதுமக்களின் நலன் கருதி கழிப்பிடக் கட்டிடத்தினை (Resource Recovery Centre) RRC கட்டிடமாக கடந்த 18.09.2019-ல் மாற்றியமைக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.<br>எனவே நகராட்சி பொறியாளரின் அறிக்கையின்படி மேற்படி கழிப்பிடக் கட்டிடம் RRC கட்டிடமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதால் வெள்ளூரணி கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை இனத்தை பதிவேட்டிலிருந்து 01.04.2020 முதல் நிரந்தரமாக நீக்கம் செய்ய மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.959/2020/அ1)</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>1467</td>
<td>பொருள்.4<br>புளியங்குடி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு JCB TN-76-U-9970 வாகனத்திற்கு ஸ்டேரிங் ரேம்ப் சீல் வலது (ம) இடதுபுறம் சரிசெய்தல், ஸ்டெப்லேசர் சீல் மாற்றுதல், முன்பக்கெட் டீத் வாங்குவதற்கு தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து 31.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளியின்</th></tr>
</table>
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>எண்</td><td></td><td>விலை விபரம்<br>(GST உட்பட)</td></tr>
<tr><td>1</td><td>ஸ்ரீராம் ஹைட்ராலிக்ஸ்,<br>145/1, தென்காசி மெயின்<br>ரோடு,<br>கே.டி.சி.டிப்போ,<br>புளியங்குடி.</td><td>ஸ்டேரிங் ரேம்ப் சீல்<br>வலது (ம) இடதுபுறம்<br>சரிசெய்தல் - ரூ.2800/-<br>ஸ்டெப்லேசர் சீல்<br>மாற்றுதல் 1 செட்<br>ரூ.3535/-<br>முன்பக்கெட் டீத் - 7<br>எண்ணம் - ரூ.3600/-</td></tr>
<tr><td>2</td><td>ராம் ஹைட்ராலிக்ஸ்,<br>மதுரை-தென்காசி<br>மெயின் ரோடு,<br>புளியங்குடி.</td><td>ஸ்டேரிங் ரேம்ப் சீல்<br>வலது (ம) இடதுபுறம்<br>சரிசெய்தல் - ரூ.2800/-<br>ஸ்டெப்லேசர் சீல்<br>மாற்றுதல் 1 செட்<br>ரூ.3535/-<br>முன்பக்கெட் டீத் - 7<br>எண்ணம் - ரூ.4100/-</td></tr>
</table>
மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் உள்ள ஸ்ரீராம் ஹைட்ராலிக்ஸ், 145/1, தென்காசி மெயின் ரோடு, கே.டி.சி.டிப்போ, புளியங்குடி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீராம் ஹைட்ராலிக்ஸ், 145/1, தென்காசி மெயின் ரோடு, கே.டி.சி.டிப்போ, புளியங்குடி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1505/2020/எச்1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>1468</td>
<td>பொருள்.5<br>புளியங்குடி நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று அதிகமாக பரவி வந்ததாலும், தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்திரவின்படியும் இந்நகராட்சி முழுவதும் தொற்று பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டதால் 09.04.2020 முதல் 12.04.2020 வரை உள்ள நான்கு நாட்களுக்கு கொரோனா பாதிக்கப்பட்டுள்ள பகுதியில் உள்ள ஏழை, எளிய மக்களுக்கு அம்மா உணவகம் மூலம் உணவு பொட்டலத்துடன் முட்டை புளியங்குடி தினசரி சந்தை எதிர்புறமுள்ள பிஸ்மி பிராய்லர்ஸ் என்ற நிறுவனம் மூலம் விலைக்கு பெறப்பட்டு வழங்கப்பட்டது. மேற்கண்ட நான்கு தினங்களுக்கு இலவச உணவுடன் முட்டை வழங்க பெறப்பட்ட 1000 எண்ணம் முட்டைக்கான தொகை ரூ.4,450/-யை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் செலவிட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1871/2020/அ1)</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>1469</td>
<td>பொருள்.6<br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு மினி டிப்பர் லாரி TN-76-Y-0216 வாகனத்திற்கு 24.07.2020 அன்று தகுதிச்சான்று சங்கரன்கோவில் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் பெறப்பட்டது. அதற்கான செலவுத்தொகை ரூ.7290/- மட்டும் ஓட்டுநர் திரு.S.இராஜேந்திரன் என்பவர் மூலம் தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.7290/- மட்டும்</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | திரு.இராஜேந்திரன் ஓட்டுநருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி செலவுத் தொகையினை நகராட்சி பொதுநிதியின் கீழ் வழங்க மன்றம் அனுமதிக்க வேண்டப்படுகிறது.<br>1. S.S.N.SLD (S.J.No.TN-18128 நம்பர் வேகக்கட்டுப்பாட்டு கருவி - ரூ.5000/-<br>2. தகுதிச்சான்று கட்டணம் - ரூ.850/-<br>3. ரிப்பிளேட் ஸ்டிக்கர் 18x80 - ரூ.1440/- | |
| | 1470 | பொருள்.7<br>இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் பிரிவு டேங்கர்லாரி TN-72-W-5173 Policy No.0918843119P107559963, 12.09.2020ம் தேதியுடன் முடிவடைகிறது. மேற்படி வாகனத்திற்கு இன்சூரன்ஸ் புதுப்பிக்க வேண்டி இருப்பதால் புளியங்குடி யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தின் மூலம் புதுப்பிக்கவும், அதற்கான பிரிமீயம் தொகை ரூ.16418, CGST & SGST (9%) 60+60=120, CGST & SGST - Basic TP ( (6%) 945+945=1890) Total = 16418+120+1890 = 18,428/- மட்டும் செலுத்துவதற்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி வாகனத்திற்கு இன்சூரன்ஸ் பிரிமீயம் தொகை ரூ.18428/- மட்டும் செலுத்தவும், அதற்கான செலவுத்தொகையினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2053/2018/இ2) | அனுமதிக்கப் பட்டது |
| | 1471 | பொருள்.8<br>இந்நகராட்சி குடிநீர் பிரிவு டேங்கர் லாரி வாகனம் TN-72-W-5173 வாகனத்திற்கு 2020-2021 ஆம் ஆண்டுக்கு தகுதிச்சான்று பெற சங்கரன்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று கட்டணம் ரூ.650/-, புகைச்சான்று கட்டணம் ரூ.200/-, ஸ்டிக்கர் கட்டணம் ரூ.1920/-, பசுமை வரி கட்டணம் ரூ.1010/- மற்றும் வேகா மீட்டர் கருவி கட்டணம் ரூ.5000/- மொத்தம் ரூ.8780/- (650+200+1920+1010+5000=8780) ஓட்டுநர் மு.சங்கிலியாண்டி என்பவர் மூலம் தொகை செலுத்தப்பட்டுள்ளது. அதற்கான பட்டியல் சமர்ப்பித்துள்ளார். மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு செலுத்தப்பட்ட தொகை ரூ.8780/- மட்டும் ஓட்டுநர் மு.சங்கிலியாண்டி என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி செலவுத் தொகையினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1901/2020/இ2) | அனுமதிக்கப் பட்டது |
| | 1472 | பொருள்.9<br>செயலர், சுகாதார துறை, சென்னை மற்றும் இயக்குநர், பொதுசுகாதார துறை, சென்னை அவர்களின் 12.02.2020ம் தேதிய ஆய்வுக்கூட்ட அறிவுரையிலும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 03.01.2020ம் தேதிய ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளபடியும், புளியங்குடி நகரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் டெங்கு காய்ச்சல் தீவிரமாக பரவி வருவதாலும், புளியங்குடி நகராட்சி பகுதியில் காலியிடங்களில் தேவையற்ற பொருட்களை | அனுமதிக்கப் பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>அப்புறப்படுத்துவதற்கும், வாறுகால் சுத்தம் செய்வதற்கும் துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். தற்போது கொரோனா நோய்த் தொற்று பரவி வருகிறது. மேற்படி பணிகளை துரிதமாக மேற்கொள்வதற்கு பணியாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கும், வாறுகால் சுத்தம் செய்யும் பணி செய்வதற்கும் 30 எண்ணம் பணியாளர்கள் பணியமர்த்திக் கொள்ள 19.05.2020 அன்று 90 நாட்களுக்கு 16.08.2020 வரை மன்ற அனுமதி பெறப்பட்டது. எனவே தற்போது கொரோனா காய்ச்சல் தீவிரமாக பரவி வருவதால் கொரோனா தடுப்பு பணிகளான கிருமிநாசினி தெளிப்பதற்கும், கட்டுப்பாட்டு பகுதிகளில் தூய்மை பணி மேற்கொள்வதற்கும், வாறுகால் சுத்தம் செய்வதற்கும் ஏற்கனவே மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித எண்.உ4/4368/2020, நாள்-20.04.2020-ன்படி தெரிவித்துள்ள கொரோனா தடுப்பு பணிகளுக்காக 30 DBC பணியாளர்களை 17.08.2020 முதல் 15.11.2020 வரை (320x30x90) 90 நாட்களுக்கு பணியமர்த்தவும், அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.8.64 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண்.505/2020/எச்1)</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>1473</td>
<td>பொருள்.10<br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த ஆண்டு ஏற்பட்ட பருவ மழையின் காரணமாக சாலைகள் மிகவும் சேதமடைந்து காணப்படுவதாலும், நகர்பகுதிகளில் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் குழாய்கள் பதித்து வீட்டுக் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதன் காரணமாக அனைத்து பிரதான சாலைகள் மற்றும் தெருக்களும் சேதமடைந்து உள்ளதாலும் தமிழ்நாடு நிலையான நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TNSUDP) 2020-2021ன் கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்ள மதிப்பீடுகள் ரூ.1141.00 இலட்சத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தின் கீழ் அட்டவணையில் உள்ள பணிகளை மேற்கொள்வதற்கான நிதியை அரசிடமிருந்து முழு மான்யமாக பெறவும், அதற்கான நிர்வாக அனுமதியை வழங்குமாறும் கேட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.231/2020/இ1)
<table>
<tr><th>வ. எ ண்</th><th>பணி விபரம்</th><th>தார்சா லை நீளம் (மீ)</th><th>தார்சா லை அகலம் (மீ)</th><th>மதிப்பீடு ரூ. இலட்ச ம்</th></tr>
<tr><td>1</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 14 - காந்திபஜார், ஆர்.எஸ்.கே.பி.ரோடு, வார்டு 13, சங்கர விநாயகர் கோவில் தெரு, வார்டு-14 சிதம்பர வடக்கு தெரு, வார்டு - 22 ஊரணி தென்வடல் தெரு, வார்டு 19, நாட்டாண்மை</td><td>2760.00</td><td>5.60</td><td>200.00</td></tr>
</table>
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அருணாசல விநாயகர் கோவில் தெரு, லெப்பைசாபுரம் தெரு (ஊரணி மேற்கு பகுதி) | | | | | |
| | | | 2 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு-32 பாம்புக்கோவில் சந்தை ரோடு கீழ் பகுதி, வார்டு-33 அய்யாபுரம் மெயின்ரோடு, ஈஸ்வரன்கோவில் தென்வடல் தெரு, மடத்துத்தெரு, செல்லியம்மன் கோவில் தெரு, ஈஸ்வரன் கோவில் தெரு, அன்னை இந்திரா தெரு, அரண்மனை தெருக்களில் தார்சாலை அமைத்தல் | 3750.00 | 5.40 | 200.00 | | |
| | | | 3 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 4, சான்றோர் நடுத் தெரு, பாம்புகோவில் சந்தை ரோட்டின் கீழ் பகுதி, வார்டு-21, காயிதேமில்லத் மேற்கு தெரு, வார்டு 30, மாரியம்மன் கோவில் தெரு, வார்டு 21, காயிதேமில்லத் 1, 2வது தெருக்கள், வார்டு 6, முப்புடாதியம்மன் கோவில் தெரு, வார்டு 18, கீழப்பள்ளிவாசல் தெருக்களில் தார்சாலை அமைத்தல் | 2965.00 | 5.00 | 200.00 | | |
| | | | 4 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 11, மேலமந்தை தெரு, வாழைமலையாறு ரோட்டின் முன்பகுதி, 10வது தெரு, வார்டு 5, சான்றோர் வடக்கு தெரு, வார்டு 6, சுந்தரவிநாயகர் கோவில் தெரு, கொல்லகம்பளத்தார் குறுக்கு தெரு, காட்டுநாயக்கன் தெரு, ஓடைத் தெரு (சப்பழக்காரர் தெரு), வார்டு 28, பாம்புகோவில் சந்தை ரோட்டில் தார்சாலை மற்றும் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 2938.00 | 4.50 | 200.00 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 6, நயினார் தெரு, வார்டு 5, வி.கே.ஆர்.நகர் 1வது தெரு, வார்டு 3, அம்பேத்கார் 9வது மேலத் தெரு, அம்பேத்கார் 9வது தெரு, அம்பேத்கார் 3, 8வது தெருக்கள், வார்டு 18, புதுமனை 1ம் தெரு, வார்டு 17, காலாடி நடுத்தெருக்களில் (இம்மானுவேல் நகர்) தார்சாலை மற்றும் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 1695.00 | 4.70 | 141.00 |
| 6 | இந்நகராட்சிக்குட்பட்ட உரக்கிடங்கு செல்லும் சாலையில் தார்சாலை மற்றும் தடுப்பு சுவர் மற்றும் அமைத்தல் | 605.00 | 4.00 | 200.00 |
| | மொத்தம் | 14713.00 | | 1141.00 |

| | | | |
|---|---|---|---|
| | 1474 | பொருள்.11<br>இந்நகராட்சி பொதுப்பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகனம் TN-79-E3178 வாகனத்திற்கு 4 டயர்கள் முழுவதுமாக தேய்மானம் ஏற்பட்டு வாகனம் இயக்க மிகவும் சிரமமாக உள்ளதாகவும், புதியதாக 4 டயர்கள் மாற்றித் தருமாற திரு.எஸ்.கணேசன் ஈப்பு ஓட்டுநர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். மேற்படி பொதுப்பணி மேற்பார்வையாளர் அறிக்கையின் பிரகாரம் மேற்படி வாகனத்திற்கு புதிய 4 டயர்கள் வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.28,800/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவுத் தொகையினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>1475</td>
<td>
பொருள்.12<br>
இந்நகராட்சி பொதுப்பிரிவு ஈப்பு வாகனம் TN-79-E-3178 புதிய 4 டயர்கள் விநியோகம் செய்தல் பணிக்கு இவ்வலுவலக ந.க.எண்.1923/2020/இ2, நாள்.26.08.2020-ன்படி விலைப்புள்ளி கோரப்பட்டு 27.08.2020 அன்று பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளை பார்வையிட்டு குறைந்த விலைப்புள்ளியினை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>விலைப்புள்ளிதாரர்கள் விபரம்</th><th>விலைப் புள்ளி தொகை</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>ஸ்ரீமுருகன் டயர்ஸ்,<br>42, மெயின் ரோடு,<br>புளியங்குடி.</td><td>ரூ.29,200/-</td><td>மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>ஸ்ரீசெல்வ விநாயகர் கார்கேர்ஸ்,<br>16/2, சங்கரன்கோவில் மெயின் ரோடு, புளியங்குடி.</td><td>ரூ.28,800/-</td><td>மதிப்பீட்டை விட குறைவு.</td></tr>
</table>
மேற்கண்டவாறு உள்ள இரு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக உள்ள புளியங்குடி ஸ்ரீசெல்வவிநாயகர் கார் கேர்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை அனுமதித்து இந்நகராட்சி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கியதையும், அதற்கான நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

**தனிஅலுவலர் (ம) ஆணையாளர்,**
**புளியங்குடி நகராட்சி.**